## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No. 2/2015

DW1– ஜீனா நாள் 26.03.2025

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி – மணிமேகலை எனது சகோதரி. 1–ம் பிரதிவாதி எனது சகோதரி. 3 முதல் 6 பிரதிவாதிகள் எனது சகோதரர்கள். நாங்கள் அனைவரும் இந்து சம்பிரதாயத்தைதான் கடைபிடிக்கிறோம். நாங்கள் அனைவரும் இந்து கூட்டுக்குடும்பம் என்றால் சரிதான். தாவா சொத்துக்களைப் பொறுத்து வாதிக்கும் 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கிடையே பாகம் பிரிக்கப்படவில்லை என்று சொன்னால், சகோதரர்கள் மட்டும் பாகம் பிரித்துக்கொண்டார்கள். சர்வே எண் 288/7B சம்மந்தமாகதான் சகோதரர்கள் பாகம் பிரித்துக்கொண்டார்கள். தாவா 2–ம் இன சொத்தை பொறுத்து எனக்கு பாகம் எதுவும் ஒதுக்கப்படவில்லை. நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் எனது சகோதரர்கள் பாகம் பிரித்துக்கொண்டது பற்றி எதிர் கட்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா 2–ம் இன சொத்தை பொறுத்து பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக்கொண்டார்கள். எந்த வருடம் பத்திரம் எழுதினார்கள் என்று ஞாபகமில்லை. யார் யாருக்கு எவ்வளவு சொத்து கொடுத்தார்கள் என்று தெரியாது. நானும், 1–ம் பிரதிவாதியும், வாதியும் அதில் தரப்பினர்கள் அல்ல. தாவா 2–ம் இன சொத்தில் எனது அப்பா, பெரியப்பா, சித்தப்பா ஆகியோர் பாகப் பிரிவினைக்காக போட்ட வழக்கில் எனது தந்தைக்கு பாகத்தில் கிடைத்ததுதான் தாவா 2–ம் இன சொத்து என்றால் சரிதான். 2–ம் இன சொத்தில் எனது சகோதரர்கள் பாகம் பிரித்துக்கொண்டது போக மீதம் சொத்து உள்ளது. அது இன்னும் பொது குடும்ப சொத்தாகதான் உள்ளது. எனது அப்பா ஜவுளி வியாபாரம் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. 10.04.2001–ல் எனது அப்பா இறந்தார். அப்போது நான் விவரம் தெரிந்தவர்தான். எனது அப்பா தொழில் எதுவும் செய்யவில்லை. சும்மாதான் இருந்தார். எனது அப்பா பெரம்பலூர், எளம்பலூரில் உள்ள விவசாய நிலங்களில் விவசாயம் செய்து வந்தார். அதன் மூலம் வருமானம் ஈட்டி வந்தார் என்றால் நான் சிறிய

பிள்ளையாக இருக்கும்போது அதை பணத்துக்குதான் குத்தகைக்கு விட்டிருந்தார். ஆனால், பணம் எதுவும் வரவில்லை. சர்வே எண் 325/3–ல் 4 ஏக்கர் 50 செண்ட், சர்வே எண் 249/2–ல் 2 ஏக்கர், நிலத்தை என் அப்பா கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. எனது பெரியப்பா வாங்கி என் அப்பா பெயரில் எழுதி வைத்தார். சர்வே எண் 422/6–ல், 49 செண்ட் சர்வே எண் 422/7–ல் 2 ஏக்கர் 56 செண்ட் நிலத்தை என் அப்பா குடும்ப வருமானத்தை வைத்து வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. என் பெரியப்பாதான் வாங்கினார். மேற்படி சொத்துக்கள் வழக்குமூலமாக பாகத்தில் என் அப்பாவுக்கு கிடைத்த சொத்துக்கள்தான். தாவா சொத்துக்கள் அனைத்தும் எங்கள் குடும்பத்துக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். சர்வே எண் 288/7 நிலம் அடமானம் மூலம் என் அப்பாவுக்கு கிடைத்தது என்றால், எனக்கு தெரியாது. என் அப்பா உயிருடன் இருக்கும்வரை தாவா சொத்துக்கள் அனைத்தையும் அவர்தான் நிர்வாகம் செய்து வந்தார். எனது தாயார் 2012–ல் இறந்தார். அப்பா இறந்தபிறகு அம்மாதான் சொத்துக்களைப் பார்த்து வந்தார்.

வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா அளித்து ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.